
# எழுதி வளர்ந்த இயக்கம் 19

■ பேராசிரியர் சுப.வீரபாண்டியன்




திராவிட இயக்கத்தின் வளர்ச்சியில் தமிழ்த் திரைப்படங்களுக்கு என்று தனியாக ஓர் இடமுண்டு. எப்போதுமே, படிப்பதைவிட கேட்பது எளிது, கேட்பதை விடப் பார்ப்பது எளிது. இது உளவியல்... ஆகையினால், புத்தகங்களைப் படித்து அறிந்து கொள்வதைவிட, பேச்சுகளைக் கேட்டு அறிந்துகொள்வதைவிட, திரைப்படங்களைப் பார்த்து அறிந்துகொள்வது மக்களில் பலருக்கும் எளிதானதாக இருந்தது.

இதனைப் புரிந்துகொண்ட திராவிட இயக்கத் தலைவர்கள் தமிழ்த் திரையுலகைக் கைப்பற்றினார்கள் என்றே சொல்லவேண்டும்.

ஒரு குறிப்பிட்ட காலகட்டத்தில் திராவிட இயக்கத் தலைவர்களுடைய வசனங்கள், திராவிட இயக்கத்தில் ஈடுபாடு உள்ள நடிகர்களின் நடிப்பு, திராவிட இயக்கத்தைச் சார்ந்தவர்களினுடைய பாடல்கள், என்று பல்வேறு துறைகளிலும், நம் இயக்கக் கருத்துக்கள் திரைப்பட உலகில் பரவின.

இதுகுறித்து, திராவிட இயக்க ஆய்வாளர் க.திருநாவுக்கரசு அவர்கள் ஒரு புத்தகத்தை சில ஆண்டுகளுக்கு முன்பு எழுதியிருக்கிறார். **‘திராவிட இயக்கமும், திரைப்பட உலகமும்’** என்பது அந்தப் புத்தகத்தின் பெயர்.

மயிலாப்பூர் மந்தைவெளியிலே இருக்கிற நக்கீரன் பதிப்பகம் அதை வெளியிட்டிருக்கிறது. அந்த நூலின் முன்னுரை தமிழ்த் திரையுலகம் பற்றிய பல அரிய செய்திகளை நமக்குச் சொல்கிறது.

## திரையில் திராவிட இயக்க உணர்வாளர்கள்

தமிழில் 1917-ஆம் ஆண்டில் ஓர் ஊமைப் படம் வந்தது. அப்போது பேசும் படம் இல்லை. **‘கீசக வதம்’** என்கிற படம்தான் முதலில் வந்த ஊமைப் படம்.

முதல் தமிழ்ப் படம் அதாவது, தமிழில் பேசிய முதல் படம் 1931-ஆம் ஆண்டில் வந்த **‘காளிதாஸ்’!** தமிழுக்கு மட்டுமில்லை, தெலுங்குக்கும் அதுதான் முதல் படம். அதற்குப் பிறகு தொடர்ந்து, திரைப்படங்கள் வந்தன. ஆனால், அனைத்தும் புராணப் படங்களாகவே இருந்தன.

ஒரு ஐந்தாறு படங்களுக்குப் பிறகுதான், ‘மேனகா’ என்கிற ஒரு படம் சமூகக் கதை சார்ந்த படமாக வந்தது. அந்த **‘மேனகா’**வில் கலைவாணர் அவர்கள் நடித்திருக்கிறார். அவர் முதன்முதலாக ஒப்பந்தமானது **‘சதி லீலாவதி’** என்னும் படத்தில். ஆனாலும், வெளிவந்த முதல் படம் இந்த ‘மேனகா’ தான்.

எனவே, திராவிட இயக்க உணர்வாளர்களில் முதலில் திரைப்படத் துறைக்குப் போனவர் என்று கலைவாணர் அவர்களைச் சொல்லலாம். அவருக்கு அடுத்து 1937-ஆம் ஆண்டு **புரட்சிக் கவிஞர் பாரதிதாசன்** அவர்கள் கதை, வசனம் எழுதிய **‘கவி காளமேகம்’** என்னும் படம் வந்தது. இப்படி வரிசையாக ஒரு 18 பேரைப் பற்றிய குறிப்புகள் அனைத்தும் இந்த நூலில் அடங்கியிருக்கின்றன.

## அறியாத கலைஞர்களை அறிய...

கலைவாணர் தொடங்கி, புரட்சிக் கவிஞர், பிறகு நம்முடைய அறிஞர் அண்ணா, அதற்குப் பிறகு தலைவர் கலைஞர், கவிஞர் கண்ணதாசன், எம்.ஜி.ஆர். என்று வரிசைப்படுத்தி இறுதியாக திருவாரூர் தங்கராசு 18 -வதாக உள்ளே வருகிறார். அவருடைய கதை, வசனங்கள் பற்றிய செய்திகள் மற்ற உரையாடல் ஆசிரியர்கள் என்று 20 பகுதிகளைக் கொண்டதாக இந்தப் புத்தகம் இருக்கிறது.

**திராவிட இயக்கம், அதன் சிந்தனைகள், சாதனைகள் ஆகியவற்றைத் தாங்கி ஏராளமான புத்தகங்கள் வந்துகொண்டே இருக்கின்றன. அவற்றை எப்படித் தேர்வு செய்வது, எந்தப் புத்தகத்தைப் படிப்பது என்பதை அறிவுரைக்கிறது இந்தத் தொடர்...**

க.திருநாவுக்கரசு



இயல்பாகவே எல்லோருக்கும் திரைப்படத்தில் ஒரு நாட்டமுண்டு என்பதால், இந்தப் புத்தகத்தை எடுத்தால் ஒரு கதை படிப்பது போல, மிக விரைவாக எல்லோரும் படித்துவிட முடியும். நமக்குத் தெரிந்த எம்.ஜி.ஆர்., கவிஞர் கண்ணதாசன் போன்றவர்கள் எல்லோரும் இருக்கிறார்கள். எஸ்.எஸ்.ராஜேந்திரன், அதிகம் தெரியாத ‘இசைமணி’ டி.வி. நாராயணசாமி, ‘வளையாபதி’ முத்துக்கிருஷ்ணன் போன்றோர் பற்றிய செய்திகளும் உள்ளே இருக்கின்றன. நடிகவேள் எம்.ஆர். ராதா பற்றிய செய்திகளும் சுவையாக இருக்கின்றன.

# திராவிடமும் திரைவானும்

## மீண்டும் திரையில் திராவிட இயக்கம்

‘சதி லீலாவதி’ தான் கலைவாணர் அவர்களுக்கு முதல் படம். எம்.ஜி.ஆருக்கும் முதல் படம் இதுதான். டி.எஸ்.பாலையா, எம்.கே.ராதா போன்ற நடிகர்களுக்கும் அதுவே முதல் படம்.

அறிஞர் அண்ணா அவர்கள் எழுதிய **‘வேலைக்காரி’, ‘நல்லதம்பி’** என்கிற இரண்டு திரைப்படங்களும் ஒரே ஆண்டு ஒரே மாதம் (1949 பிப்ரவரி) வெளிவந்தன.

அதற்கு இரண்டு ஆண்டுகளுக்கு முன்பே தலைவர் கலைஞர் அவர்கள் கதை, வசனம் எழுதி, எம்.ஜி.ஆர். நடித்து வெளிவந்த படம் **‘ராஜகுமாரி’.**

1952-ஆம் ஆண்டு **‘பராசக்தி’,** 1954-ஆம் ஆண்டு **‘ரத்தக்கண்ணீர்’,** அதற்குப் பிறகு, தமிழ்த்திரை உலகில் திராவிட இயக்கத்தினுடைய செல்வாக்கு கொடிகட்டிப் பறந்தது என்று சொல்லலாம். இவையெல்லாம் தெரிந்துகொள்வதற்காக மட்டுமில்லை, கலை உலகத்தில் மீண்டும் நம்முடைய ஆளுமை வரவேண்டும். அது திரைப்படமாக இருக்கலாம். தொலைக்காட்சியாக இருக்கலாம். இவைதான் மக்களிடம் எளிமையாகச் சென்றடைகிற சாதனங்கள். அவற்றை நாம் கற்றுக் கொள்ள வேண்டும் அதற்கும் இந்தப் புத்தகம் உதவும்.

**கலை உலகத்தில் மீண்டும் நம்முடைய ஆளுமை வரவேண்டும். அது திரைப்படமாக இருக்கலாம். தொலைக்காட்சியாக இருக்கலாம். இவைதான் மக்களிடம் எளிமையாகச் சென்றடைகிற சாதனங்கள்.**

## திராவிட இயக்கத்துக்கு எதிரான விதைப்பு

இந்த நூலின் தொடர்ச்சியாக, எழுத்தாளர்கள் சுபகுணராஜன், குமரன்தாஸ் ஆகியோர் தமிழ்த் திரைப்படங்களில் திராவிட இயக்கக் கொள்கைகள் குறித்து எழுதிய செய்திகளை நாம் அறிந்துகொள்ள வேண்டியது மிகவும் தேவையானதாகும்!

1970-களுக்குப் பிறகு, தமிழ்த் திரைப்படங்களில், திராவிட இயக்கத்துக்கும், சிறுபான்மை மதங்களுக்கும் (குறிப்பாக இஸ்லாமியர்களுக்கும்) எதிரான கருத்துகள் எப்படி விதைக்கப்பட்டன என்பதை குமரன்தாஸ் தன் நூலில் விளக்கியுள்ளார்.

பிற்காலத்தில் வெளியான **‘தாயில்லாப் பிள்ளை’, ‘வண்டிக்காரன் மகன்’, ‘ஒரே ரத்தம்’** போன்ற படங்களும் இவ்வரலாற்றில் குறிப்பிடத்தக்க இடம் பெறுபவை!

ஓராண்டுக்கு முன் வெளியான **‘நெஞ்சுக்கு நீதி’** படத்திலும் ஒரு சிறப்பு உண்டு. ஆழ்ந்து நோக்கினால், **‘தாயில்லாப் பிள்ளை’**யில் வரும் பதஞ்சலி சாஸ்திரியின் வாரிசுதான், ‘நெஞ்சுக்கு நீதி’யில் இடம் பெற்றுள்ள சுந்தரம் அய்யர் என்பது புரியும்.

இன்னும், இன்றும்... மேலும், மேலும்... திரைவானில் கறுப்பு சிவப்பும், உதயசூரியனும் தொடர்ந்து உலா வர வேண்டும்!

-வாசிப்போம்

## :ப்ளாஷ்பேக்





நாகராசன்

### தலைவரின் பெருந்தன்மை!

1993-ஆம் ஆண்டு கட்சி பிளவு ஏற்பட்டு நெருக்கடிக்கு உள்ளானது. காஞ்சிபுரத்திலிருந்து பெரியவர் சி.வி.எம் தலைமையில் ஒரு குழுவாக தலைவரைச் சந்தித்து ஆதரவளிக்க, கோபாலபுரம் இல்லத்துக்குச் சென்றிருந்தோம். எங்களைப் பார்த்ததும், “நானே உங்களைச் சந்திக்க வரலாம் என்று இருந்தேன்” என்றார். சிறிது நேரம் உரையாடிய பிறகு, சி.வி.எம் அவர்களை “நீங்க நடுவில் உட்காருங்க” என்று சொல்லி புகைப்படக்காரரை அழைத்து புகைப்படம் எடுக்கச் சொன்னார். ஒரு தலைவன் இத்தனை பெருந்தன்மையோடு இருக்க முடியுமா என்று எண்ணி வியந்தேன். அந்தக் குழுவில் நானும் இடம்பெற்றிருப்பதை நாள்தோறும் எண்ணி மகிழ்கிறேன்.

**-நாத்திகம் நாகராசன்,**
**தலைமைக் கழக பேச்சாளர்,**
**காஞ்சிபுரம் மாவட்டம்.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம். அனுப்ப வேண்டிய முகவரி : அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை-600 018. வாட்ஸ்அப் எண் : 90033-24473 மின்னஞ்சல் youthwing@dmk.in

## கருவூலம் உண்டியல் நிதி!

**1964- ஆம் ஆண்டு கழகத்துக்கு கடும் நிதிநெருக்கடி ஏற்பட்டது. இடைத்தேர்தல்கள், மாநகராட்சித் தேர்தல்கள், இந்தி எதிர்ப்புப் போராட்டச் செலவுகள், ‘அன்பகம்’ கட்டடச் செலவு என எல்லாம் சேர்ந்து நிதி நெருக்கடி உருவானது. அதற்காக உண்டியல் ஏந்தி நிதி திரட்டும் ஆலோசனையை முன்வைத்தார் கழகப் பொருளாளர் கலைஞர். அதை ஏற்று, பேரறிஞர் அண்ணா பொதுமக்களுக்கு கோரிக்கை விடுக்க, கலைஞர் உள்பட கழக முன்னணியினர் உண்டியல் ஏந்தி வீதிகளில் இறங்கினர். ஒரே நாளில் உண்டியல் மூலம் ஒரு காசு, இரண்டு காசாக சுமார் எண்பதாயிரம் ரூபாய் வரை குவிந்தது.**

## #கலைஞர்100



அவர்களுக்கு தெரியும்....!
கலைஞரை ஏன் எதிர்க்க வேண்டும் என்று...
கலைஞருக்கும் தெரியும்..
அவர்கள் ஏன் தன்னை எதிர்க்கிறார்கள் என்று...
புரிந்தவர்கள் கலைஞர் பின் நின்றார்கள்...
ஆனால்...!
புரியாத பலர் கட்டுக்கதைகளில் மூழ்கினார்கள்...
எதிர்மறை அரசியலை நேர்மறையாக செய்தவர் கலைஞர்...
கலைஞர் என்ற பட்டத்திற்கு 100 சதம் பொறுத்தமானவர்.....

**....இணையத்தில் வைரலாகும் ஒரு பதிவிலிருந்து**

## திராவிட இயக்க இதழ்கள் - குத்தூசி




1962-ஆம் ஆண்டு சா.குருசாமி அவர்களை ஆசிரியராகக் கொண்டு, அக்டோபர்-2 ஆம் தேதி காந்தி ஜெயந்தி அன்று, சென்னையிலிருந்து வெளிவந்த மாத இதழ் ‘குத்தூசி’. இதழின் அட்டைப்படத்தில், **‘குத்தூசி: ஹை க்ளாஸ் தமிழ் மந்த்லி’** என்று ஆங்கிலத்தில் அச்சிடப்பட்டு வந்திருக்கிறது.

வணிக நோக்கமின்றி, பகுத்தறிவுக் கருத்துகளுக்காகவே தொடர்ந்து வெளியான இதழ் இது. கோட்டோவியம், தலையங்கம், துணுக்குகள், கட்டுரைகள் என அனைத்திலும் பகுத்தறிவுக் கருத்துகளை நுட்பமாக விதைத்துள்ளது. அறிவியல், பொருளாதாரம், இலக்கியம், அரசியல், கணிதம் எனப் பல துறைகள் குறித்து ஆழமான கட்டுரைகளை வெளியிட்டிருக்கிறது இந்த இதழ். ஒரு கட்டுரை சுமார் 10 பக்கங்களுக்கு மேலாகக்கூட விரிந்திருக்கிறது.


“பல்லாயிரம் பேர் படித்துப் பயனடைவார்கள் என்ற நம்பிக்கையில்லை, ஆசையுமில்லை. சில ஆயிரம் பேராவது இம்மாதிரியான ஏட்டை விரும்பிப் படித்துப் பயனடைவார்கள் என்ற நம்பிக்கை மட்டும் உண்டு. இதுபோதும் நமக்கு” என்று முதல் இதழில் ஆசிரியர் கூறியிருந்தார்.

போலவே, இரண்டாம் ஆண்டு தொடக்கத்தில், **“குத்தூசியைக் கொல்ல முடியாது! தற்கொலையும் செய்து கொள்ளாது! இயற்கையான மரணம் ஏற்பட்டால்தான்! ஆனால், ஆலமரமாகப் பரந்து, படர்ந்து வளராது. நிழல் தரமுடியாவிடினும், தனித் தென்னை மரத்தைப் போல பல பேறறிஞர்களும், பட்டறிவுப் பெரியார்களும் உவந்தளிக்கும் நீரையுண்டு தலையாலே இளநீராகத் தரும்! தந்து கொண்டேயிருக்கும்”** என்று எழுதியிருக்கிறார் இதழாசிரியர்.

1964-ஆம் ஆண்டு அக்டோபர் மாத வெளியீடு குத்தூசியின் மூன்றாவது ஆண்டுத் தொடக்க இதழாக மலர்ந்துள்ளது. இதழில் பண்டைக்கால தமிழக நாணயங்கள் பற்றியும், தமிழ் இலக்கியங்கள் பற்றியும் குறிப்பிடப்பட்டுள்ளது. **‘பேனா மன்னர்கள்’** எனப் புகழ்பெற்ற எழுத்தாளர்கள் பற்றியும் எழுதியுள்ளது. இந்த இதழில், அதே ஆண்டு தொடங்கப்பட்ட **‘அறிவுப்பாதை’** என்ற சுயமரியாதை இயக்க வார ஏடு பற்றிய குறிப்பையும் வெளியிட்டுள்ளது.

**‘தமிழ் நூல் நிலையம்’** என்ற ஓர் பதிப்பகத்தை அமைத்து, அதன் மூலம் நூல்களை வெளியிட்டுள்ளது. ஓராண்டு முழுவதும் வந்த இதழ்களைத் தொகுப்பாக ‘பைண்ட்’ செய்தும் அந்தப் பதிப்பகம் விற்பனை செய்திருக்கிறது.

## திராவிடத்தால் வாழ்கிறோம் 133




எழுத்து : கோவி.லெனின்
ஓவியம் : கி.சொக்கலிங்கம்

-வாழ்வோம்

RNI 1244/57 - Postal Reg.No.MA/43/2021-2023.Licenced to post under without pre payment of postage vide No.TN/WPP-94/SR/2021-2023 Published by Karthikeyan Shanmugasundaram on behalf of Murasoli Trust from No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 and Printed by R.N.Murugan at Dinakaran Press, No.2/2, Melur Main Road, Uthangudi, Madurai - 625 107. Editor: Karthikeyan Shanmugasundaram, Regn.No.7436, Ph:044-2817 9191, 2817 9131 Fax: 2817 9292.